Koviloor Acadamy

இரை. 160.
431.
5410
KVC06693
PAGANERI.
17.10.76
31 7 77
4.12.77
PRESENTED BY
V. PR PL. V KASIVISVANATHAN
CHETTIAR
THIRUVALLUVAR LIBRARY



Koviloor Acadamy

Koviloor Acadamy



Koviloor Acadamy

கழக வெளியீடு : ௯௨௫

ஈசாப் கதைகள்

[முதற் புத்தகம்]

கழகக் கல்வியறிஞர் குழுவினர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

Koviloor Acadamy

First Edition : September, 1952

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS - 1.

Head Office :

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

Koviloor Academy

பதிப்புரை

சிறு சிறு கதைகள் வாயிலாகச் சிறுவர் சிறுமியர்க்கு அரிய செய்திகளைச் சொல்வது மிகச் சிறந்த கல்வி முறையாகும். இது பழங்காலத்திலிருந்து இன்றுவரையுள்ள கல்வித்துறை அறிஞர்கள் அனைவரும் ஒருங்கே ஒப்புக்கொண்டதொரு பேருண்மையாகும்.

இத்துறையில் கிரேக்கப் பழங்கதைகளான ஈசாப்பின் நீதிக்கதைகள் குறிப்பிடத்தக்கனவாகும். (ஈசாப்பு என்னும் பெரியார் கிரேக்க நாட்டில் கி. மு. 5-வது நூற்றாண்டிற்குமுன் வாழ்ந்ததாகக் கருதப்படுபவர்). அவை நேரடியாக நீதிகளைச் சொல்லாமல் கதைகளைக் கற்று அவற்றின் நயத்தின்கண் ஈடுபட்டவர் தாமாகவே அவற்றை உணர்ந்து கொள்ளுமாறு செய்கின்றன. அவற்றில் மனித உணர்ச்சிகள் செயல்கள் முதலியன விலங்கினங்களாகவும் அவற்றின் செயல்களாகவும் புனையப் பெற்றுள்ள முறை நம் நாட்டுப் பஞ்ச தந்திரக் கதைகளைப் போன்று மிகவுஞ் சிறந்தனவாக அமைந்துள்ளன.

ஈசாப் கதைகளின் நயங்களை நம்நாட்டுச் சிறுவர் சிறுமியர் அனைவரும் தொகுப்பாகக் கற்றுப் பயன்பெறச் சிறு சிறு நூல்களாக அக்கதைகளிற் சிறந்தன அனைத்தையும் தருவதே இந்நூல்களின் நோக்கமாகும்.

கதைகள் நேரடியான மொழிபெயர்ப்பல்ல. நம் நாட்டிற்கு ஏற்ப எழுதப்பெற்றுள்ளவை. விளக்கப் படங்களுடன் எளிய இனிய நடையில் அமைந்து, பெரிய எழுத்தில் அச்சிடப் பெற்றுள்ள இக் கதை நூல்கள் தமிழகச் சிறுவர் சிறுமியரால் விரும்பி வரவேற்கப்படும் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

Koviloor Acadamy

உள்ளுறை

Koviloor Acadamy



1. நாயும் கழுதையும்

ஓர் ஊரில் கண்ணன் என்ற பெயருடைய செல்வன் ஒருவன் இருந்தான். அவன் ஓர் அழகிய நாய்க்குட்டியை வளர்த்து வந்தான்.

அந்த நாய்க்குட்டி மிகவும் அழகாயிருந்த துடன் சூட்டிக்கையாகவும் விளங்கியது. கண்ணனை எந்நேரமும் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கும். வாலை ஆட்டிக்கொண்டே துள்ளித் துள்ளி ஓடி விளையாடும். கண்ணன் காலை நக்கும்; அவன் மடி மேல் ஏறிக் குதித்து விளையாடும்.

Koviloor Acadamy

கண்ணன் அதற்குத் தின்பண்டங்கள் தருவான். முதுகில் தட்டிக் கொடுப்பான். சிரித்துச் சிரித்து மகிழ்வுடன் அதனோடு விளையாடுவான்.

அவ் வீட்டிலேயே ஒரு கழுதையும் இருந்தது. வெளியே மூட்டைகள் சுமந்து செல்வதும், வெளியிலிருந்து மூட்டைகள் சுமந்து வருவதும் அதனுடைய வேலை.

நாய் கண்ணனுடன் விளையாடுவதைக் கண்ட கழுதை வருந்தியது. தான் வேலைகள் செய்தும் தன்னிடம் அன்புகாட்டாத கண்ணன், சோம்பேறியாக விளையாடிக்கொண்டிருக்கும் நாய்க்குட்டியுடன் விளையாடுவதைக் கண்டு அதன் மனம் பெரிதும் துன்பம் அடைந்தது. தானும் நாயைப்போல் விளையாடினால் தன்னிடமும் கண்ணன் அன்பு காட்டுவான் என்று தவறாக எண்ணியது.

ஒருநாள் கண்ணன் வெளியிலிருந்து களைப்புடன் வீட்டிற்குள் வந்தான். அங்கிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தான்.

வழக்கம்போலவே நாய் அவனுடன் சென்று விளையாடியது. கழுதையும் கண்ணனை நோக்கி

Koviloor Academy

ஓடிச் சென்றது. தன் வாலை ஆட்டிக்கொண்டே துள்ளிக் குதித்துவரும் கழுதையைக் கண்டு கண்ணன் நகைத்தான்.


அதன் செயலைக் கண்டு கண்ணன் மகிழ்வதாகக் கழுதை எண்ணியது. அதற்கு ஒரே ஆனந்தம்! அதன் முன்னங்கால்களைத் தூக்கி அவன் மார்பில் வைத்து, அதன் முகத்தை அவன் முகத்தோடு சேர்த்துக் கனைத்தது. கண்ணன் வலி பொறுக்கமுடியாமல் கதறினான்.

சத்தங்கேட்ட வேலையாட்கள் ஓடிவந்தனர். தடிக்கம்புகளால் கழுதையை நன்றாக அடித்துத் துரத்தினர். கழுதை அலறிக்கொண்டே ஓட்டம் பிடித்தது.

அன்றிலிருந்து கழுதைக்குத் தீனியையும் மிகவும் குறைத்துவிட்டனர். கழுதைக்கு ஏன் தன்னை அடித்தார்கள் என்றே புரியவில்லை. பசியாலும் வருத்தத்தாலும் மெலிந்து எலும்புந் தோலுமாகிக் கழுதை இறந்துவிட்டது.

"அவரவர்க்கு ஏற்ற செய்கையே நன்மை தரும்."

Koviloor Acadamy



2. உழைப்பே புதையல்

முருகன் கிழவனகிவிட்டான். அவன் ஓர் உழவன். உடல் வருந்தி உழைத்து அதனுல் சிறப்பாக வாழ்பவன் அவன். சோம்பலாக அவன் இருந்ததே கிடையாது. உழைப்பதையே அவன் தன் கடமையாகக் கருதினன். உழைப்பின் பயனும் அவனுக்குக் கிடைத்தது.

அவனுக்கு மக்கள் இருந்தனர். ஆனுல், அனே வரும் சோம்பேறிகள். தந்தை முதுமையிலும்

Koviloor Acadamy

உழைப்பதைக் கண்டும் ஒருவனாவது தகப்பனுடன் வேலைசெய்ய முன்வரவில்லை.

முடிவில் கிழவன் சோர்ந்து படுத்த படுக்கையாக ஆய்விட்டான். தான் இறப்பதற்குமுன் தன் மக்களுக்கு ஏற்ற விதத்தில் அறிவுரை கூற அவன் விரும்பினான்.

மக்களை அழைத்து 'என் அருமை மக்களே! இவ்வளவு நாளும் நான் உழைத்து உங்களைக் காப்பாற்றினேன். இதோ சாவு என்னை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. எனக்குப் பின்னரும் நீங்கள் வருந்தக்கூடாதல்லவா? அதற்காக நான் பாடுபட்டுச் சேர்த்த பணத்தையெல்லாம் நம் கழனிகளிற் புதைத்து வைத்திருக்கின்றேன். நீங்கள் வேறு வேலை செய்யாவிட்டாலும் அதைத் தேடி எடுத்தாவது இன்பமாக வாழுங்கள்,' என்று கூறினான். சிறிது நேரத்தில் அவன் உயிரும் போய் விட்டது.

மக்கள் அனைவரும் அடுத்த நாள் ஒருமிக்கச் சேர்ந்தனர். ஆளுக்கொரு மண்வெட்டியுடன் கழனிகளை நோக்கிச் சென்றனர். இரவு பகலாக வேலை செய்தனர். மண்ணை வெட்டி வெட்டிப் புதையலைத்

Koviloor Acadamy


தேடினர். கழனிகள் முழுவதையும் ஓர் அடி நிலங் கூடப் பாக்கியின்றி அவர்கள் ஒருமுறைக்கு இரு முறை வெட்டிப் பார்த்துவிட்டனர். ஒன்றையுமே காணவில்லை. மீண்டும் மூன்ருவது முறையாக மண்ணைக் கிளறத் தொடங்கினர்.

அப்போது அங்கே ஒரு பெரியவர் வந்தார். ஒருநாளும் வேலைசெய்யாத அவர்கள் ஊக்கத்துடன் மண்வெட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார். 'ஏது இப்படி வேலைசெய்கிறீர்கள்?' என்று கேட்டார்.

புதையலைப்பற்றிக் கேட்டதும் கிழவர் சிரித்தார். 'நிலந்தான் நமக்குப் புதையல். கொத்திய நிலத்தினைப் பண்படுத்தி நெல் விதைத்தால் நல்ல பலன் கிடைக்கும்' என்ருர்.

அதைக்கேட்ட மக்கள் திடுக்கிட்டனர். என்ருலும் பெரியவர் சொற்படி பயிரிட்டனர். நிலமும் நல்ல விளைச்சலைத் தந்தது. தம் தந்தையின் வாக்கு அவர்களுக்கு அப்போதுதான் நன்ருக விளங்கியது. அதன்பின் என்றுமே அவர்கள் சோம்பலாக இருந்ததே இல்லை.

"உழைப்பின்றி ஊதியம் இல்லை."



3. வானம்பாடியும் குஞ்சுகளும்

நிலங்களிலுள்ள பயிர்கள் கதிர் பழுத்து அறுவடைக்குத் தயாராயிருந்தன. அவ்விளை நிலங் களுள் ஒன்றில் வானம்பாடியொன்று குஞ்சு பொரித்திருந்தது. குஞ்சுகள் மிகவும் சிறியவை. பறந்து செல்வதற்குப் பழகவில்லை. எனவே அறு வடைக்குமுன் அவற்றை வேறு பதனமான இடத் திற்கு மாற்ற விரும்பியது தாய்ப்பறவை. அதனால் அது அதன் குஞ்சுகளிடம் 'நானில்லாதபோது

Koviloor Acadamy

யாராவது இங்கே வந்து ஏதாவது பேசினல் கவன முடன் கேட்டு என்னிடம் சொல்லவேண்டும்' என்று கூறி வெளியே இரைதேடச் சென்றது.

தாய்க்குருவி போனபின் வயற்காரனும் அவன் மகனும் வந்து போனர்கள். தகப்பன் மகனிடம் 'நீ நாளைக் காலையில் நம் அக்கம்பக்கத்தாரையும் நண்பர்களையும் அழைத்து வா? நாளைக்கே பயிரை அறுத்துவிடலாம்' என்று சொன்னதைக் கேட்ட குஞ்சுகள் நடுங்கின. தாய் வந்ததும் அப்படியே கேட்டதைச் சொல்லி உடனே தங்களை வேறிடம் கொண்டு செல்ல வேண்டின.

'அஞ்சாதீர்கள். நாளை அவனல் அறுக்க முடியாது. அக்கம்பக்கத்தாரும் நண்பர்களும் அப்படி உடனே உதவ வரமாட்டார்கள்' என்று குஞ்சுகளைத் தேற்றியது தாய்.

மறுநாளும் தாய்க்குருவி வெளியேறியதும் தகப்பனும் மகனும் வந்தனர். நெடுநேரம் காத்திருந்தும் யாரும் வரவில்லை. 'இவர்களை நம்பினல் இப்படித்தான். நீ நாளை உன் மாமன் வீட்டாரை வருமாறு சொல்லி வா' என்றன் தகப்பன். பின்னர் அவர்கள் வீடு சென்றனர். குஞ்சுகள்

Koviloor Acadamy


கேட்டுத் தாயிடம் கூறின. 'ஏன் நடுங்குகிறீர்கள்' சொந்தக்காரர்களும் அவ்வளவு தூரம் உதவமாட்டார்கள்' என்று குஞ்சுகளைத் தேற்றியது தாய்.

மூன்றும் நாளும் தகப்பனும் மகனும் வந்தனர். நெடுநேரம் காத்திருந்தனர். ஒருவரும் உதவிக்கு வரவில்லை. தகப்பன் வருத்தத்துடன் மகனை நோக்கி 'வா, வீட்டுக்குப் போகலாம். நாளை நாமே நம் வீட்டாருடன் வந்து அறுத்துவிடுவோம். இனிப் பிறரை நம்பினல் தானியங்கள் உதிர்ந்து விடும்' என்ருன். பிறகு அவர்கள் போய்விட்டனர்.

தாய்ப்பறவையிடம் குஞ்சுகள் தாம் கேட்டதைச் சொல்லின. 'நாம் இனி வெளியேறிவிட வேண்டியதுதான். தன்னை நம்பியிருக்கும் ஒருவன் என்றுமே ஏமாறமாட்டான்' என்று சொல்லித் தாய்ப்பறவை தன் குஞ்சுகளை உடனே வேறிடத்திற்கு மாற்றிவிட்டது.

"தன் கையே தனக்கு உதவும்."

Koviloor Acadamy



4. காகமும் மயில்களும்

காட்டோரத்திலுள்ள சோலையொன்றில் சில காகங்கள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அவற்றுள் ஒன்றிற்குத் தற்பெருமை அதிகம். தன்னைப்பற்றி அது மிகவும் பெரிதாக எண்ணிக்கொண்டது. பிற காகங்களுடன் பழகுவதையே இழிவு என்று எண்ணியது. அதனோடு உறவாட நெருங்கும் காகங்களையெல்லாம் சீறிக்கொண்டே கொத்தித் துரத்தி வந்தது.

Koviloor Acadamy

ஒருநாள் அந்தத் தற்பெருமை கொண்ட காகம் மலேயடிவாரத்திற்குத் தனியே இரை தேடச் சென்றது. அங்கே மயில் தோகைகள் ஏராள மாகக் கீழே உதிர்ந்து கிடந்தன. அவற்றைப் பொறுக்கிச் செருகிக் கொண்டது. தன் அழகைத் தானே பார்த்து மகிழ்ந்தது. மயிலேப்போலவே நடக்கவும் ஆடவும் தொடங்கியது.

சற்றுத் தொலேவில் மயில் கூட்டம் ஒன்று இருப்பதைக் கண்டதும், மயில்களுக்கும் தன் அழகைக் காட்ட விரும்பியது அந்தக் காகம். இரவல் மயில் தோகைகளுடன், இரவல் நடை நடந்து மயில்களின் நடுவே சென்று நின்றது. மயில்கள் வியப்புடன் பார்த்தன. மேலும் தன் பெருமை யைக் காட்ட விரும்பிய காகம் தன் சிறகை விரித்து ஆடவுந் தொடங்கியது. அதன் திருட்டுத் தோகைகளேயும் நடையையும் ஆட்டத்தையும் கண்ட மயில்கள் சினம் கொண்டன. தம்மை இழிவுபடுத்தி நகையாடல் செய்வதாக எண்ணின. எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து காகத்தை நோக்கிப் பாய்ந்து சென்றன. அதன் இறக்கைகளேப் பிடுங்கி எறிந்தன. கூரிய அலகுகளால் காகத்தைக் கொத்திப் பிடுங்கின. காகத்தின் உடல் முழுவதும் புண்ணுகிச் செந்நீர் வடிந்தது.

Koviloor Academy

காக்கைக்கு அவமானமும் வலியும் பொறுக்க முடியவில்லை. புண்ணுடன் தன் உடலோடு தன் இனத்தை நோக்கிச் சென்றது. அவை முன்னர் அது தம்முடன் நடந்துகொண்ட செருக்கான வாழ்வைச் சுட்டிக்காட்டி அதனைச் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டன.

அவைகளுள் ஒன்று 'நண்பனே இயற்கை உனக்குத் தந்த வாழ்வை உதறிவிட்டுச் செருக்குடன் வாழ நினைத்தாய். இப்போது நலிவு அடைந்து வந்து வேண்டுகின்றாய். எங்களையும் உன் நடத்தையால் வெறுக்குமாறு செய்துவிட்டாய். வீண் பெருமை கொண்டால் கேடுதான்' என்று சொல்லித் திரும்பிப் பார்க்காமலே சென்றது.

"வீண் பெருமை வீழ்ச்சி தரும்."

யெ

வந்தது.



5. தவளைகட்கு ஓர் அரசன்

ஏரிகளிலும் குளங்களிலும் தனித்தனியாக வாழ்ந்துவந்த தவளைகள் ஒரு நாள் ஒன்று கூடின. தனியாக வாழ்ந்த வாழ்வில் அவைகள் வெறுப்பு அடைந்திருந்தன. தங்களுக்கு ஓர் அரசன் வேண்டும் என்று அவை அனைத்தும் ஒரே மனதாக முடிவு செய்தன. கடவுளிடம் தங்கள் விருப்பத்தைக்கூறி அவை முறையிட்டன.

கடவுள் இரக்கங்கொண்டார். அவைகளின் முட்டாள்தனத்திற்கு வருந்தினார். இருந்தாலும்

Koviloor Acadamy

அவைகட்கு மன நிறைவு உண்டாக் ஒரு மரக் கட்டையைக் குளத்தண்ணீரில் வீசி எறிந்து ‘இதோ உங்களுக்கும் ஓர் அரசன்’ என்றார்.

மரக்கட்டை வேகமாகத் தண்ணீரில் வந்து விழுந்தது. ஆரவாரமான ஒலி உண்டாயிற்று. அடுக்கடுக்காக அலைகள் கிளம்பின. தவளைகள் நடுங்கின. தம் அரசனிடம் மரியாதையுடன் அஞ்சி வாழ்ந்தன. துடுக்கு நிறைந்த சில குட்டித் தவளைகள் அசையாது கிடந்த மரக்கட்டையை மெதுவாக நெருங்கின. கட்டை அப்போதும் அசையாது கிடக்கவே அதன்மேல் ஏறிக் குதித்துக் கும்மாளம் போட்டன.

அத்தனைக்கும் ஏன் என்று கேளாது அசை வற்றிருந்த தம் அரசன்மேல் நாளடைவில் தவளை கட்கு வெறுப்புத் தட்டின. எனவே மீண்டும் ‘தம் மிற் சிலரை’ வேறோர் அரசன் வேண்டும் எனக் கேட்டுக் கடவுளிடம் தூது அனுப்பின.

அவைகளும் கடவுளை நோக்கி முறையிட்டன. கடவுள் கேட்டார். ‘இதோ இப்போது நல்ல அரசனை அனுப்புகின்றேன்’ என்று ஒரு கொக்கை அரசனாக அனுப்பினார்.

Koviloor Acadamy

கொக்கு ஆரவாரமின்றிக் குளத்திற்கு வந்தது. ஒவ்வொரு தவளையாகப் பிடித்து விழுங்கிக் கொண்டே இருந்தது.


தவளைகள் பெரிதும் நடுக்கங்கொண்டன. தம் இனமே அழிந்துவிடும் என்று அஞ்சின. மீண்டும் கடவுளைக் காணவும் கேட்கவும் கூசின. எனவே தேவதூதனை நோக்கி முறையிட்டன. கடவுளிடம் மன்றாடித் தங்களுக்கு வேறோர் அரசனையாவது, அல்லது பழைய அரசனையே யாவது தரச் செய்யுமாறு வேண்டின.

'முடியாது! நீங்களே கடவுளிடம் விரும்பிக் கேட்டுத்தானே இந்த அரசனைப் பெற்றீர்கள். அதன் பயனை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று சொல்லித் தேவதூதன் போய் விட்டான்.

வேறு வழியின்றித் தவளைகள் திரும்பின. அன்று முதல் மிகவும் அச்சத்துடன் மறைவிடங் களில், பதுங்கியும் நீரினுள் மறைந்தும் அவை வாழ்ந்தன.

"அதிக ஆசை அழிவைத் தரும்."

Koviloor Acadamy



6. பொன் முட்டை

ஒருவனிடம் பல வாத்துகள் இருந்தன. அவற்றுள் ஒன்று மிகவும் அழகாக இருந்தது.

அதை அவன் அன்பாக வளர்த்தான். அதற்கு நிறையத் தீனி போட்டான். அது நன்ருகக் கொழுத்து வளர்ந்து முட்டையிடத் தொடங்கியது.

என்ன வியப்பு! அது முதல் முதல் இட்ட முட்டை பொன் முட்டையாக இருந்தது. வாத்துக்

Koviloor Academy

காரனுக்கு ஒரே கொண்டாட்டம்! அதைத் தலை மேல் வைத்துக் கூத்தாடினான்.

நாள்தோறும் அவ்வாத்து ஒவ்வோர் அழகிய பொன் முட்டையிட்டது. அதை விற்று வாத்துக் காரன் விரைவில் பெரிய பணக்காரன் ஆனான். பணத்துடன் அவன் ஆசையும் மிகுந்தது. அவன் மனமும் வேகமாக வேலை செய்யத் தொடங்கியது.

'இந்த வாத்தின் உடலுள் நிறையப் பொன் முட்டைகள் இருக்கவேண்டும். அதனால்தானே அது நாள்தோறும் ஒவ்வொரு முட்டையாக இடுகின்றது. அவ்வளவு முட்டைகளும் ஒரே நாளில் கிடைத்தால் சீக்கிரமே நான் பெரும் பணக்காரனாகி விடலாமே' என்று நினைத்தான் அவன்.

எண்ண எண்ண அவன் ஆசை வரம்பு மிகுந்தது. அதனால் அறிவு மழுங்கியது. கைகள் தினவெடுத்தன. வீட்டினுள் சென்று கூரிய கத்தி ஒன்றை எடுத்து வந்தான்.

அன்று முட்டையிட்டபின் வாசலில் போய்த் தீனி தின்றுகொண்டிருந்த வாத்தைப் போய்ப் பிடித்தான். அது பயத்தால் இறக்கைகளை

Koviloor Acadamy

அடித்துக்கொண்டே தப்பியோட முயன்றது. பலமாக அதைப் பிடித்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றான். கதவை நன்றாகத் தாளிட்டுக்கொண்டு வாத்தின் வயிற்றைக் கத்தியால் கீறினான்.


அங்கு ஒன்றையுங் காணவில்லை. வாத்து துடித்து வீழ்ந்து இறந்துவிட்டதுதான் அவன் கண்டது. அவன் கதறினான்; தன் முட்டாள் தனத்தையும் ஆத்திரத்தையும் எண்ணிக் கண்ணீர் விட்டான். அழுது அழுது என்ன பயன். வாத்தும் செத்தது. அவன் எண்ணமும் மண்ணா யிற்று. நாள்தோறும் கிடைத்துவந்த ஒவ்வொரு பொன் முட்டையும் ஒழிந்தது.

கொஞ்சம் பணம் வந்ததும் விரைவில் பெருஞ் செல்வனாக வேண்டுமென்ற ஆசை அதிக மாகின்றது. அதிக ஆசையின் அளவு கடக்கும் போது கண்மூடித்தனத்தால் எதையாவது செய்து விட்டு உள்ளதையும் இழந்து துன்புறுகின்றனர் பலர்.

இந்த நிலையே வாத்துக்காரனுக்கும் ஏற் பட்டது.

"அதிக ஆசை அழிவு தரும்."

Koviloor Academy



7. கரடி காதில் சொன்னது

இருவர் வெளியூர்ப் பயணம் போய்க்கொண்டிருந்தனர். இருவரும் ஒன்ருகவே செல்வதென்றும், ஏதேனும் இடையூறு நேரினும் ஒருவர்க்கொருவர் துணையாக உதவுவதாகவும் இருவரும் ஒருவர்க்கொருவர் வாக்களித்துக் கொண்டனர்.

வழியிடையே ஒரு காடு குறுக்கிட்டது. காட்டினூடு அவர்கள் சிறிது தூரம் சென்றிருப்பார்கள்; அப்போது பக்கத்திலிருந்த புதரிலிருந்து பாய்ந்து வந்த கரடியொன்றை இருவரும் கண்டனர்.

Koviloor Acadamy

அவர்களில் மெலிந்தவனுகவும் வாட்டசாட்ட மானவனுகவுமிருந்த ஒருவன் உடனேயே பக்கத்தி லிருந்த பெரிய மரத்தின்மேல் ஏறிவிட்டான்.

தன் நண்பனைப் பற்றியோ அல்லது தன் வாக்குறுதியைப்பற்றியோ அவன் கவலைப்பட வில்லை. அவன் உயிரே அவனுக்குப் பெரிதாகப் பட்டது.

நண்பனே ஓடிவிட்டான்; கரடியைத் தனியாக எதிர்க்கவும் முடியாது. எனவே மற்றவன் தரை யோடு ஒட்டியிருக்கும்படி குப்புறப் படுத்துக்கொண்டு மூச்சை நன்ருக அடக்கிச் செத்தவன்போல் கிடந் தான்.

கரடி செத்த பிணத்தைத் தின்பதில்லை. ஆதலால், அவன் முகத்தையும் உடலையும் முகர்ந்து பார்த்துச் செத்த பிணம் என்று நினைத்துத் தன் வழியே போய்விட்டது.

கரடி போனதும் மரத்திலிருந்தவன் கீழே இறங்கினுன். படுத்திருந்தவனும் எழுந்து உட்கார்ந் தான். மரத்திலிருந்தவன் படுத்தவனிடம் சென்று "நண்பனே! கரடி உன்னை ஒன்றும் செய்யாததுடன்

Koviloor Acadamy


உன் காதில் ஏதோ இரகசியம் பேசிக்கொண்டிருந்ததே, அது என்ன என்று எனக்குச் சொல்லமாட்டாயா?'' என்று குத்தலாகக் கேட்டான்.

'நீ பெரிய கோழை என்றது. மேலும் வருங் காலத்தில் இடையூறும் தொல்லையும் நேரும்போது தோழனைக் கைவிட்டுத் தன் உயிரைக் காத்துக் கொள்ள ஓடிவிடுகின்ற உன்போன்ற தோழர்களை நம்பக்கூடாது' என்றும் கரடி சொல்லியது. 'அது தான் உண்மை. சிறந்த நண்பனே! இனி நீயும் நானும் தோழர்களா யிருந்தது போதும். நான் தனியாகவே போகிறேன்' என்று கூறிக்கொண்டே படுத்திருந்தவன் எழுந்து விரைந்து சென்று விட்டான்.

வாக்குறுதிகளைத் தாராளமாக வழங்குபவர்களை நம்பி ஏமாந்துவிடலாகாது. ஒருவரை நம்புமுன் அவரைப்பற்றி நன்ருக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

"நன்கு பழகிய பின்னரே நட்புச் செய்தல் வேண்டும்."

Koviloor Academy



8. இரண்டு தவளைகள்

ஓர் ஊரில் பெரிய ஏரி ஒன்று இருந்தது. அதில் நிறையத் தண்ணீர் எக்காலமும் இருக்கும். அங்கே இரண்டு தவளைகள் நெடுங்காலம் ஒற்றுமை யோடு நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

அந்த ஆண்டில் கோடைகாலம் மிகவுங் கடுமை யாக இருந்தது. வற்ருத அந்த ஏரி நீரும் வற்றித் தரையும் வறண்டுவிட்டது. எனவே தவளைகள்

Koviloor Acadamy

இரண்டும் வேறு தகுதியான இடம்நோக்கிப் போகப் புறப்பட்டன.

தத்தித் தத்தி அவை போய்க்கொண்டிருந்தன. நெடுந்தூரம் சென்றதும் ஒரு தோட்டத்தினுள் அவை சென்றன. தோட்டத்தில் மாமரங்களும் தென்னை மரங்களும் அடர்ந்து இருந்தன. அங்கே ஓர் ஆழமான கிணறும் இருந்தது.

கிணற்றைக் கண்டதும் ஒரு தவளை மகிழ்ச்சியடைந்தது. 'இங்கே குதிப்போம், கவலையின்றி வாழலாம். வசதியாகத் தோன்றுகின்றது. குளிர்ந்த நிழல், நிறையத் தண்ணீரும் இருக்கின்றது' என்றது.

உடனே அடுத்த தவளை, 'நண்பனே! பொறு! குதித்துவிடாதே! கிணற்றுத் தண்ணீர் நன்றாகத்தானிருக்கின்றது. இடமும் நீ சொல்லியபடியே குளிர்ச்சியாகவும் வசதியாகவும் இருக்கின்றது. ஆனால், நன்றாக எண்ணிப் பார்! அங்கும் தண்ணீர் வற்றிவிட்டால் நம்மால் வெளியே போகமுடியுமா? உள்ளேயே கிடந்து சாகவேண்டியதுதானே," என்றது.

Koviloor Acadamy

'ஆம், நண்பனே! அவசரப்பட்டு ஆராயாமல் முடிவு செய்துவிட்டேன். வா வேறிடம் போகலாம்' என்றது முதல் தவளை.

உடனே இரண்டும் தம் பயணத்தைத் தொடங்கின. மீண்டும் நெடுந்தொலை கடந்தபின் மலையடிவாரத்திலிருந்த ஒரு வளமான ஏரியில் சென்று அவை தங்கின.

துயரம் வருகின்றது. நாம் அதை நீக்கி இன்பந்தேட முயல்கின்றோம். அப்போது நம் எதிரே தோன்றும் சிறு சிறு வசதிகளைக் கண்டு மனம் மகிழ்ந்துவிடலாகாது. சிறு சிறு வசதிகள் சிறிது காலமே நிலைநிற்பனவாகும்.

அவசரத்தில் நாம் செய்யும் முடிவுகள் சில சமயம் பெருந் துயரத்திலுங் கொண்டு விட்டுவிடும். நம் வாழ்வையே அவை பாழாக்கியும் விடலாம். எனவே, எதையும் நன்கு ஆராய்ந்த பின்னரே ஓர் முடிவுக்கு வரவேண்டும்.

"எண்ணித் துணிக கருமம்."

Koviloor Acadamy



9. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

மலைகளில் சிறு சிறு நீரோடைகள் பல இருக்கும். அவற்றுள் சிலவற்றில் மிக்க கோடை காலத்திலுங்கூடத் தண்ணீர் செல்வதுண்டு. மலையிலுள்ள விலங்குகளும் மலையை அடுத்த காட்டில் வாழும் விலங்குகளும் அவ்வோடைகளில் சென்று நீர் குடிப்பது வழக்கம்.

நல்ல கோடை காலத்து நண்பகலில் ஒருநாள் மலைப்பக்கத்தை யடுத்துள்ள நீரோடைகளுள் ஒன்றில் தண்ணீர் குடிப்பதற்காக ஓர் ஓநாய் சென்

Koviloor Acadamy

றது. அதே நேரத்தில் அங்கு ஓடையின் கீழ்ப் பக்கத்தில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்த ஆட்டுக்குட்டி யொன்றைக் கண்டது.

ஆட்டுக்குட்டியைக் கண்ட ஓநாயின் நாவில் நீர்ஊற்றெடுத்தது. மெதுவாக அது ஆட்டுக்குட்டி யிடம் வந்தது.

ஓநாயைக் கண்ட ஆட்டுக்குட்டி பயத்தால் நடுங்கியது.

'தண்ணீரை எல்லாம் கலக்கிவிட்டாயே! என்ன எண்ணத்தில் அப்படிச் செய்தாய்' என்று உறுமியது ஓநாய்.

'தண்ணீரோ உங்களிடமிருந்தே கீழேயுள்ள எனக்கு வருகின்றது. எப்படி நான் அதைக் கலக்கி யிருக்கமுடியும்?' என்று நடுங்கிக்கொண்டே மிக மெல்லிய குரலில் பணிவாகச் சொன்னது ஆட்டுக் குட்டி.

'அது சரி. அப்படியே வைத்துக்கொள்வோம். ஆனால், ஆறு திங்கட்குமுன் நீ என்னைத் தகாத சொற்களால் திட்டினாய் என்று கேள்விப்பட்டேன். என்ன குறும்புத்தனம் உனக்கு? என்னை ஏன் திட்டி

Koviloor Acadamy

ஞய்?' என்றது ஓநாய். அதன் கண்கள் வெறி கொண்டு விளங்கின.

அநியாயமான அந்தக் குற்றச்சாட்டைக் கேட்ட ஆட்டுக்குட்டி பெரிதும் நடுநடுங்கியது. இருந்தாலும் ஒருவாறுகத் துணிவுடன் 'ஆணை யிட்டுச் சொல்லுகின்றேன். நீங்கள் சொல்வது நான் பிறப்பதற்கு இரண்டு மாதங்கட்கு முன்னர் ஆயிற்றே,' என்றது.

உண்மைக்கு எதிராக எவ்வளவு நேரந்தான் பொய் சொல்லமுடியும். எனவே வாதாடுவதால் பயனில்லை என்றறிந்த ஓநாய் உறுமிக்கொண்டே ஆட்டுக்குட்டியை நோக்கிப் பாய்ந்து வந்தது.

'பயலே! எதிர்த்தா பேசுகின்ருய். நீ திட்டா விட்டால் உன் அப்பன் திட்டியிருப்பான். யாரா யிருந்தாலும் எனக்கு ஒன்றுதான்' என்று சொல்லிக் கொண்டே ஆட்டுக்குட்டியின்மேல் பாய்ந்து அத னைக் கொன்று தின்றுவிட்டது.

கெட்டவர்கள் கேடுசெய்வதற்கு ஏதாவது ஒரு பொய்க் காரணத்தை எப்படியாவது கண்டுபிடித்து விடுவார்கள்.

"பிறர்க்குக் கேடு செய்வதே கெட்டவர் தொழில்"

Koviloor Acadamy



10. ஆமையும் முயலும்

ஒரு காட்டில் வழிப்பாதை ஒன்று இருந்தது. அவ் வழிப்பாதையில் ஒருநாள் முயல் ஒன்று விரைவாக ஓடி வந்துகொண்டிருந்தது. இயல்பாகவே முயல் விரைந்து செல்லக்கூடியது. அன்று முயல் அவசரமாக வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தது. அதனுல் மிக விரைவாக ஓடிற்று.

வழியில் ஓர் ஆமை அசைந்து அசைந்து சென்றுகொண்டிருந்தது. ஆமையை முயல் கண்

Koviloor Acadamy

டது. தன் விரைந்த ஓட்டத்தையும் ஆமையின் அசைந்த நடையையும் எண்ணிச் சிரித்தது. தன் அவசரத்தையும் மறந்து ஆமையைக் கேலி பேசத் தொடங்கியது.

'ஆமையாரே! என்னைப் பாரும். நான் எவ்வளவு விரைவாக ஓடுகின்றேன். நீர் ஏன் இப்படி அசைகின்றீர். உமக்கு உடல்நலமில்லையா? அல்லது உம் நடையே இவ்வளவுதானா?' என்று கேலியாகக் கேட்டது முயல்.

ஆமைக்கு மிகவும் மனவருத்தம். இருப்பினும், 'நான் எப்படியும் போகின்றேன். உமக்கென்ன! வேண்டுமானால் என்னோடு பந்தயத்துக்கு வருகிறீரா,' என்று அதுவும் கேலியாகவே கேட்டது.

இதைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்தது ஒரு நரி. 'அதுதான் சரி! நாளைக்குப் பந்தயம். இரண்டுபேரும் காலையில் வந்துவிடுங்கள். இங்கிருந்து ஒருமைல் தொலைவிலுள்ள ஆலமரத்தை யார் முதலில் அடைகிறார்கள் பார்க்கலாம்?' என்றது. இரண்டும் இணங்கின.

குறித்த நேரத்தில் பந்தயம் தொடங்கியது. முயல் சிறிது நேரத்திலேயே பாதித்தொலைவிற்கு வந்துவிட்டது. அதற்குத் தன் ஓட்டத்திலிருந்த

Koviloor Acadamy

அக்கறையைவிட ஆமையைக் கேலி செய்வதிலேயே ஆசை மிகுந்தது; அதோடு சோம்பலும் மிகுந்தது.

'இந்தச் செடி மறைவில் சற்றுக் கண்ணயரலாம். ஆமை இங்கு வரும்போது நாம் விழித்தாலும் எளிதாக முன்னேறிப் போய்விடலாம்' என்று எண்ணியது. அங்கிருந்த செடிமறைவில் சென்று படுத்தது. சற்று நேரத்தில் முயல் அயர்ந்து தூங்கிவிட்டது.

ஆமையோ எங்கும் நிற்கவுமில்லை படுக்கவுமில்லை. மெதுவாகச் சென்றுகொண்டே இருந்தது.

நெடுநேரஞ் சென்று முயல் விழித்துப் பார்த்தது. ஆமையைக் காணவில்லை. 'அந்த ஆமை இன்னமும் பாதிவழி வரவில்லையா!' என்று தனக்குள் சொல்லிச் சிரித்துக்கொண்டே ஓடியது.

குறித்த இடத்தை நெருங்கியதும் தனக்கு முன்னரே ஆமை அங்கு வந்துவிட்டதைக் கண்ட முயல் வெட்கித் தலைகுனிந்தது.

'முயலாரே நீர் ஒரு சோம்பேறி. அத்துடன் தற்பெருமைக்காரர். ஆமையாரைப் பாரும் விடா முயற்சி யுடையவர்,' என்று கூறி முயலைக் கண்டித்து, ஆமையைப் பாராட்டியது நரி.

"விடாமல் முயல்பவரே சிறப்படைவர்"

Koviloor Acadamy

டது. தன் விரைந்த ஓட்டத்தையும் ஆமையின் அசைந்த நடையையும் எண்ணிச் சிரித்தது. தன் அவசரத்தையும் மறந்து ஆமையைக் கேலி பேசத் தொடங்கியது.

'ஆமையாரே! என்னைப் பாரும். நான் எவ்வளவு விரைவாக ஓடுகின்றேன். நீர் ஏன் இப்படி அசைகின்றீர். உமக்கு உடல்நலமில்லையா? அல்லது உம் நடையே இவ்வளவுதானா?' என்று கேலியாகக் கேட்டது முயல்.

ஆமைக்கு மிகவும் மனவருத்தம். இருப்பினும், 'நான் எப்படியும் போகின்றேன். உமக்கென்ன! வேண்டுமானால் என்னோடு பந்தயத்துக்கு வருகிறீரா,' என்று அதுவும் கேலியாகவே கேட்டது.

இதைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்தது ஒரு நரி. 'அதுதான் சரி! நாளைக்குப் பந்தயம். இரண்டுபேரும் காலையில் வந்துவிடுங்கள். இங்கிருந்து ஒருமைல் தொலைவிலுள்ள ஆலமரத்தை யார் முதலில் அடைகிறார்கள் பார்க்கலாம்?' என்றது. இரண்டும் இணங்கின.

குறித்த நேரத்தில் பந்தயம் தொடங்கியது. முயல் சிறிது நேரத்திலேயே பாதித்தொலைவிற்கு வந்துவிட்டது. அதற்குத் தன் ஓட்டத்திலிருந்த

Koviloor Academy

அக்கறையைவிட ஆமையைக் கேலி செய்வதிலேயே ஆசை மிகுந்தது ; அதோடு சோம்பலும் மிகுந்தது.

'இந்தச் செடி மறைவில் சற்றுக் கண்ணயரலாம். ஆமை இங்கு வரும்போது நாம் விழித்தாலும் எளிதாக முன்னுற் போய்விடலாம்' என்று எண்ணியது. அங்கிருந்த செடிமறைவில் சென்று படுத்தது. சற்று நேரத்தில் முயல் அயர்ந்து தூங்கிவிட்டது.

ஆமையோ எங்கும் நிற்கவுமில்லை படுக்கவுமில்லை. மெதுவாகச் சென்றுகொண்டே இருந்தது.

நெடுநேரஞ் சென்று முயல் விழித்துப் பார்த்தது. ஆமையைக் காணவில்லை. 'அந்த ஆமை இன்னமும் பாதிவழி வரவில்லையா !' என்று தனக்குள் சொல்லிச் சிரித்துக்கொண்டே ஓடியது.

குறித்த இடத்தை நெருங்கியதும் தனக்கு முன்னரே ஆமை அங்கு வந்துவிட்டதைக் கண்ட முயல் வெட்கித் தலைகுனிந்தது.

'முயலாரே நீர் ஒரு சோம்பேறி. அத்துடன் தற்பெருமைக்காரர். ஆமையாரைப் பாரும் விடா முயற்சி யுடையவர்,' என்று கூறி முயலைக் கண்டித்து, ஆமையைப் பாராட்டியது நரி.

"விடாமல் முயல்பவரே சிறப்படைவர்"